1982 பிப்ரவரி 6]

ஆற்காடு நகராட்சியில் ''குளு குளு'' திரையரங்கம் மற்றும் 'சமூகக் கூடம்' கட்டும் திட்டம்.

* வினா எண். 73—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு நகராட்சியில் ''குளுகுளு'' திரையரங்கம் ஒன்றும் ''சமூகக்கூடம்'' ஒன்றும் நிறுவ துரித நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(ஆ) அதற்கென குறிப்பிட்டுள்ள நிலத்தை அரசு ஆர்ஜிதம் செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) நகராட்சி தேவையான நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. ஏ. எம். சேதுராமன் : துணைத் தலைவரவர்களே., தமிழகத்திலுள்ள சுமார் 109 நகராட்சிகளுக்கும் 'குளுகுளு' திரையரங்கள் கட்ட உறுதியளித்திருக்கிறார்கள். அந்தவகையில் பின்தங்கிய நகராட்சிகளுக்கு நிரந்தரமான ஒரு வருமானம் கிடைக்க இருக்கிற காரணத்தால் அதை துரிதமாகச் செயல் படுத்த அமைச்சரவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, தமிழகத்தில் இருக்கிற 106 நகராட்சிகளிலும் சுமார் 100 திரையரங்குகளைக் கட்ட வேண்டுமென்று முடிவினை தமிழக அரசு கடந்த ஆண்டு எடுத்தது. அதற்கு ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் போதுமான கடன் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, மத்திய அரசுக்கு திட்டத்தை அனுப்பி வைத்தோம். ஆனால் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆனாலும் நாம் மீண்டும், மீண்டும் மத்திய அரசைக் கேட்டு வருகிறோம். கண்டிப்பாக கொடுப்பார்கள் என்ற எண்ணத்தோடு இருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை.)

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவரவர்களே, அப்படி மத்திய சர்க்கார் ஒப்புதல் அளிக்கும்போது ஒவ்வொரு நகராட்சிக்கும் அந்த குளுகுளு தியேட்டர் கட்டப்படுமா ? அதற்கான உத்தேச மதிப்பீடு எந்த அளவில் இருக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

[1982 பிப்ரவரி 6

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, ஒரு ஏர் கண்டிஷன் தியேட்டர் கட்டுவதற்கு ஏறத்தாழ 25 இலட்சம் முதல் 30 இலட்சம் ரூபாய் வரையில் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஆர். சுந்தரம்: தலைவரவர்களே, நகராட்சிகளின் வருவாயைப் பெருக்குவதற்கு குளுகுளு தியேட்டர் கட்டுவதுபற்றிச் சொன்னார்கள். அதைப் போன்று வருவாயப் இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கிற பேரூராட்சிகளிலும் வருவாயை பெருக்க இத்தகைய வசதி செய்து கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்ளே, மூலக்கேள்வி நகராட்சிகளைப் பற்றியது. பேரூராட்சிகளுக்குத் தனிக் கேள்வி போடவும்.

திரு. இரா. சண்முகம்: தலைவலரவர்களே, நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மூலம் மத்திய அரசு குளுகுளு தியேட்டர் கட்டும் திட்டத்தை அனுமதிக்கவில்லை என்று சொன்னார்கள். தமிழக அரசு நகராட்சிகளுக்கு தன்னிறைவுத் திட்டத்தை அறிவித்திருக்கிறது. அந்தத் திட்டத்தின்கீழ் திரையரங்கு கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவலரவர்களே, நகராட்சிகளுக்கு தன்னிறைவுத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாக பொருளாதார அடிப்படையில் எவை எவை பலவீனமாக இருக்கிறதோ (வீக்கர் முனிசிபாலிட்டீஸ்) அவைகளை நாம் எடுத்துக் கொள்ள இருக்கிறோம். ஆனாலும் எல்லா நகராட்சிகளையும் எடுத்துக் கொள்ளும் நிலைமை இல்லை. அதே நேரத்தில் தன்னிறைவுத் திட்டம் என்பது அடிப்படையான வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக உள்ள திட்டமே அல்லாமல் குளுகுளு திரையரங்குகள் கட்டுவதற்காக அல்ல.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: தலைவரவர்களே, இந்த தன்னிறைவுத் திட்டத்திலே காஞ்சிமாநகரையும் சேர்த்துக் கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.